**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**அமர்வு வழக்கு எண். 323 / 2012. அ.சா.2. கலாவதி, நாள் - 29.08.2024.**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சித்ரா எனக்கு பக்கத்துவீட்டுக்காரர். அவர் சொல்லித்தான் எனக்கு வழக்குச் சம்பவம் தெரியும் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரிக்கும்போது, கடைக்குப் போய்ப் பார்த்தபோது, கணவர் இருந்தார் என்று சொன்னேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. எனக்கு தகவல் வந்தபோது எந்நேரம் என்றால் 6 அல்லது 6-1/4 மணியிருக்கும். எனக்கு தகவல் வரும்போது என் மூத்த மகள் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். எதிரியின் வீடு கருக்கட்டான்பட்டி என்றால் சரிதான். அது எங்கள் வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் ஆட்டோவில் போகும்போது அப்போது ரூ.20 கொடுப்போம். 10 நிமிட பயணத்தில் சென்றுவிடுவோம். வழக்குச் சம்பவத்திற்கு 4 மாதத்திற்கு முன்பு எதிரியுடன் பிரச்சனை ஏற்பட்டு என் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்போது என் பேரப் பிள்ளையும் என் வீட்டோடு இருந்தார் என்றால் சரிதான். எதிரி என் பேரப் பிள்ளையை பார்ப்பதற்கு வீட்டிற்கு வந்தார் என்றால் பிரச்சனைக்கு முந்தைய நாள் வந்து பிள்ளையை வாங்கிக்கொண்டு போனோர். பிள்ளையை கொடுப்பது சம்பந்தமாகவும், என் மகளை சேர்த்து வைப்பது சம்பந்தமாகவும் பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றால் சரிதான். என் மகள் எதிரிக்கு எதிராக விவாகரத்து மனு தாக்கல் செய்து விவாகரத்து பெற்றுவிட்டார் என்றால் அது தற்போது சம்பவத்திற்குப் பிறகுதான். பேரப் பிள்ளையை எங்களோடு வைத்துக்கொள்ள கேட்டுதான் விவாகரத்துப் பெறப்பட்டது என்றால் எதிரியை குழந்தையை தர மறுத்ததால் குழந்தையை அவரே வைத்துக்கொள்ளுமாறு சொன்னார். நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனை செல்லும்போது, போலிசார், என் கணவரைப் பார்த்தேனா

என்றால் போலிசாரைப் பார்க்கவில்லை, 108 ஆம்புலன்சை ஏற்றுவதைப் பார்த்தேன். 108 ஆம்புலன்சில் போலிசார் ஏற்றுவதைப் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. மதுரை, ராஜாஜி மருத்துவமனைக்குத்தான் அனுப்பிவைத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையிலிருந்து ஆம்புலன்சு புறப்படும்போது மாலை 6.30 மணியிருக்கும். நான்தான் மருத்துவமனையில் சேர்த்தேனா என்றால் நான், என் மகள், என் கொழுந்தனார் ஆகியோர்கள் மதுரை, அப்போலோ மருத்துவமனையில் சேர்த்தோம். உடனடியாக என் கணவரை உள்நோயாளியாக அனுமதித்தார்கள் என்றால் சரிதான். என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலிசர் எப்போது விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினம் இரவு என்று நினைக்கிறேன். நான் சொன்னதை எழுதிக்கொண்டார்கள். கையெழுத்தும் வாங்கினார்கள். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோன்றுதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொல்வது மாதிரி, சொன்ன விதத்தில் என் கணவருக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை என்றாலும், இந்த வழக்குப் பற்றி பின்னிட்டு தெரிந்து எதிரிக்கும் சம்பவத்தில் காயமேற்பட்டது என்று தெரிந்துகொண்டு, என் கணவரையும், என் மகனையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இவ்வழக்கில் சாட்சி வேண்டுமென்று என்னை சாட்சியாகப் போட்டு அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.08.29 12:55:47 +0530

உதவி அமர்வு நீதிபதி,

உசிலம்பட்டி.